**சார்பு நீதிமன்றம், செஞ்சி**

**அ.வ.எண்.111/2020** **நாள்.10.01.2025**

2025-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 10-ம் நாள் வாதி தரப்பு **2ம்** சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சேகர் | தொழில் | |
| த.பெ/க.பெ. | லட்சுமணன் | சாதி | |
| கிராமம் | தேவனூர் கூட்ரோடு | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 53 |

**வா.சா.2**
**குறுக்கு விசாரணை**

நான் விவசாயம் தேவனூர் கிராமத்தில் செய்துவருகிறேன். 27.07.2017 அன்று எங்கிருந்து எத்தனை மணிக்கு வந்தீர்கள் என்றால் காலை 9.00 மணிக்கு தேவனூரிலிருந்து மேல்மலையனூரில் உள்ள கட்சி தலைவர் வீட்டிற்கு வந்தேன். அந்த நேரத்தில் தான் புரோநோட்டில் நான் கையொப்பம் செய்தேன். நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தில் 2வது பாராவில் வாதியிடம் பிரதிவாதி தனது குடும்ப செலவிற்காகவும் வியாபாரத்திற்காகவும், அவசர நிமித்தமாகவும் வேண்டி கடனாக தொகை ரூ.3,50,000 கேட்டார். மேலும் கடனை இரண்டு தவணைகளாக பைசல் செய்வதாக கூறினார். அதனை வாதி ஒப்புக்கொண்டு ரூ-3,50,000த்தை கடந்த 27.07.2017ம் தேதியில் சாட்சிகள் முன்னிலையில் பிரதிவாதி வாதியிடம் பெற்றுக்கொண்டார் என குறிப்பிடப்பட்டுள்ளது அதில் எத்தனை மணிக்கு, யார் முன்னிலையில், எந்த இடத்தில் கேட்டார் என குறிப்பிட்டுள்ளீர்களா என்றால் குறிப்பிடவில்லை.

வாதி எந்தெந்த மாதாந்திர சீட்டு எந்தெந்த தொகை என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. வாதிக்கும் உங்களுக்கும் எந்த விதத்தில் பழக்கம் என்றால் வாதி எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் ரூ.3,50,000 தொகையை ரூ.2,00,000த்திற்கு ஒரு புரோநோட்டும், ரூ.1,50,000க்கு ஒரு புரோநோட்டும் எழுதிகொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது, மேற்படி சங்கதியைதான் வாதியும் அவரது சாட்சியில் சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து மாலை 5.00 மணிக்கு மேல்மலையனூர் வந்து ரூ.3,50,000 புரோநோட்டு எழுதிகொடுத்தாக அவரது சாட்சியத்தில் குறிப்பிட்டுள்ளார் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. பி.சா.ஆ-3 வரவு ரசீதில் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன், சார்பதிவு அலுவலகத்திற்கு சென்று ஆவணம் பதிவு செய்வதற்கு சாட்சியாக இருந்து சாட்சி கையொப்பம் செய்துள்ளீர்கள் என்றால் சரிதான்.

பி.சா.ஆ-3 வரவு ரசீது 28.07.2017ல் தான் பதிவு செய்வதற்காக தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். அப்படியென்றால் 27.07.2017 தேதியில் பிரதிவாதி புரோநோட்டு எழுதிகொடுத்தாக கூறுவது தவறு என்றால் சரியல்ல. அதேபோல் புரோநோட்டு உங்கள் முன்னிலையில் பிரதிவாதி எழுதிகொடுத்ததாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. இந்த வழக்கை தாக்கல் செய்வதற்காக வாதியால் தயாரிக்கப்பட்ட பிராம்சரி நோட்டுக்களில் நீங்கள் சாட்சியாக கையொப்பமிட்டு வாதி, பிரதிவாதியிடமிருந்து பணத்தை சட்டத்திற்கு புறம்பாக செய்த செயல்களுக்கு உறுதுணையாக இருந்ததால் நீங்கள் வாதியுடன் குற்ற செயல்களுக்காக தண்டிக்கப்படவேண்டியவர் என்றால் சரியல்ல.

அதேபோல் நீங்கள் பிரமாண வாக்குமுலத்தில் கூறியுள்ளவாறு 27.07.2017 அன்று வாதி, பிரதிவாதியிடம் ரூ.3,50,000 கொடுத்ததாகவும், அன்று அதற்கு 2 பிராம்சரி நோட்டுக்களில் சாட்சிகள் முன்னிலையில் பிரதிவாதி கையெழுத்து போட்டதாகவும், அன்று பிராம்சரி நோட்டை கிருஷ்ணன் எழுதிகொடுத்தாகவும் அதற்கு நீங்கள் சாட்சி கையொப்பம் போட்டதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. அதேபோல் பிரதிவாதி 27.07.2017 அன்றோ அதற்கு பின்போ வழக்கு பிராம்சரி நோட்டுக்கள் வா.சா.ஆ-1 மற்றும் வா.சா.ஆ-2 வாதிக்கு எழுதிகொடுக்கவில்லை வாதியே 27.07.2017 அன்று பிராம்சரி நோட்டுக்களில் தேதி மற்ற விவரங்களையும் நிரப்பி இந்த வழக்கை மோசடியாக தாக்கல் செய்துள்ளார் அதற்கு நீங்களும் உறுதுணையாக இருந்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. இதுபோல் வேறு வழக்குகளில் புரோநோட்டில் சாட்சி கையொப்பம் போட்டு சாட்சியம் அளித்துள்ளீர்களா என்றால் இல்லை.

(என்னுடைய நிரூபண வாக்குமூலத்தையும் ஆவணங்களையும் ஏற்று தாவாப்படி தீர்ப்பளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்).

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)